**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 87/2025 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கவிதா | க–பெ/ த–பெ | ரவிசந்திரன் |
| ஊர்: | : | தேவகோட்டை | சமயம் | |
| வயது: | : | 50/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.08.2026**

------------------------------------------------------------------------------------------------------------

03.08.2026

குறுக்கு விசாரணை

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எதிரியிடம் எவ்வளவு தொகை கொடுத்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ளது என்றால் ரூ. 6,50,000/–. ரூ. 6,50,000/– எனது தொகையா அல்லது வேறு நபரிடம் பெற்றுக்கொடுத்தேனா என்றால் எதிரியை எனது திருமணத்திற்கு முன்பு இருந்து தெரியும், அதன் அடிப்படையில் எனது தம்பி மனைவியின் நகைகளை அடமானம் வைத்த தொகையாகும். நான் எத்தனை வருடங்களாக தேவகோட்டையில் இருக்கிறேன் என்றால் கடந்த 2 வருடங்களாக இருக்கிறேன், அதற்கு முன்பு காரைக்குடியில் வசித்து வந்தேன். தொகை தம்பி மனைவியின் நகைகளை அடமானம் வைத்த தொகை இல்லை என்றால் சரியல்ல, அதற்கான வங்கி ரசீது என்னிடம் உள்ளது. வங்கி ரசீது தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். தம்பி மனைவியை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் அவர்கள் UK வில் உள்ளார்கள். எத்தனை வருடங்களாக அங்கு உள்ளார்கள் என்றால் 3 வருடங்களாக உள்ளார். ரூ.6,50,000/–ற்கு வட்டி எவ்வளவு என்று புகாரில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வட்டியுடன் சேர்த்து ரூ.8,38,500/– குறிப்பான வட்டி தொகை குறிப்பிடவில்லை. 1 சதவீதம்

வட்டியாகும்.

2) ம.சா.ஆ.1 புரோநோட்டில் 1 சதவீதம் வட்டி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது மகன் பெயர் பாலசுப்பிரமணியன் என்றால் சரிதான். எதிரி அவரது மகள் மூலமாக பாலசுப்பிரமணியனின் வங்கி கணக்கிற்கு வட்டி தொகை செலுத்துவார் என்றால் சரியல்ல. எதிரியின் மகள் கார்த்திகா 28.09.2021ல் ரூ.19,500/−, 25.10.2021ல் ரூ. 19,500/−, 27.02.2022ல் ரூ. 19,500/−, 06.10.2022ல் ரூ.19,500/− அனுப்பியுள்ளார் என்றால் சரிதான் **( G−Pay screen shot − 4 எ.ம.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது subject to 63 BSA certificate)** எ.ம.சா.ஆ.1ல் உள்ள பெயர் எனது மகனின் பெயர் என்றால் சரிதான். 2021 முதல் 2022 வரை மாதம் தோறும் சரியாக ரூ.19,500/− வட்டி தொகை அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல, எ.ம.சா.ஆ.1 மட்டும்தான் அனுப்பியுள்ளார். இடைப்பட்ட காலத்தில் அனுப்பவில்லையா என்றால் அனுப்பவில்லை. ரொக்கமாக தொகை கொடுத்துள்ளாரா என்றால் கொடுக்கவில்லை, ஆரம்பத்தில் ரூ.2,00,000/− கடனாகப்பெற்றார், அதற்கு ரூ.50,000/− ரொக்கமாக கொடுத்தார், அதன் பின்பு ரூ.5,00,000/− கடனாக பெற்றார். ரூ.5,00,000/− எந்த வருடம் கொடுத்தேன் என்றால் நினைவில்லை, புரோநோட் தேதியில் கொடுத்தேன். நான் மாதம் 3 சதவீதம் வட்டி என ரூ19,500/− வட்டி தொகை மாதத்திற்கு பெற்றேன் என்றால் வேறு ஒரு நபரிடம் இருந்து கடன் பெற்றேன், அவரிடம் 3 சதவீத வட்டிக்காக பெற்றேன், பின்பு வட்டி தொகையை எதிரி செலுத்தவில்லை என்பதனால் என் தம்பியின் மனைவியின் நகைகளை வைத்து அந்த கடனை அடைத்து விட்டேன்.

3) நான் ஆரம்பத்தில் இருந்து 3 சதவீதம் வட்டி என அதிக வட்டி விதித்து தொகை பெற்றேன் என்றாலும், அசலுக்காக கொடுத்த தொகையை வட்டியிலேயே கழித்து விட்டேன் என்றாலும், அதிக வட்டிக்காகத்தான தற்போதைய வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பணம் எதிரி பெறும்போதே 3 காசோலைகள் கொடுத்தார் என்றால் சரிதான். அதில் 2 காசோலைகளை பற்றி தற்போதைய வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். முதல் காசோலை 912813 எந்த தேதியில் கொடுத்தாக கூறியுள்ளேன் என்றால் 03.05.2024ல் ரூ. 2,50,000/− ற்கான காசோலை ஆகும். காசோலை எண் 912814 எந்த தேதியில் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால்

03.08.2024. 03.08.2024 ல் கொடுத்த ரூ.3,00,000/− ற்காக தற்போதைய வழக்கு தாக்கல் செய்துள்ளேன். காசோலை எண் 912813 ரூ.2,50,000/−ஐ எதற்காக வங்கியில் செலுத்த வில்லை என்றால் ரூ.3,00,000/− காசோலையை செலுத்திய பின்பு செலுத்தலாம் என்று விட்டுவிட்டேன், அதன் தேதியை பார்வையிடவில்லை. அந்த காசோலை எனது வசம் உள்ளது என்றால் சரிதான், தேடிபார்க்க வேண்டும். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் கிடைத்தால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

4) எதிரி ரூ.2,50,000/− எனக்கு கொடுத்து அந்த காசோலையை திருப்பி பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. அதிக வட்டி தொகை கேட்டு தற்போதைய வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரி முழுத்தொகையையும் செலுத்தினார் என்றாலும், அதனால்தான் காசோலையை திருப்பி செலுத்தினேன் என்றாலும் சரியல்ல, காசோலை தேடி சமர்பிக்க தயாராக உள்ளேன், நான் அதற்கான தொகையை பெறவில்லை. நான் அதிகபடியான தொகையை பெறவேண்டும் என்பதற்காகத்தான் தன்னிச்சையாக பயன்படுத்தி எதிரி மீது தற்போதைய வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதிக வட்டி கேட்டு வந்ததால்தான் எதிரியிடம் வழக்கு காசோலையை திருப்பி தர மறுத்தேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு கொடுக்கவேண்டிய தொகையை திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும், எதிரி வழக்கு காசோலை தொகை கொடுக்க சட்டப்படி கடமைபபட்டவர் இல்லை என்றாலும் சரியல்ல. ரூ. 2,50,000/−காசோலை எனது வசம் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, தேடிபார்த்து சமர்பிக்கிறேன். ரூ.3,00,000/− கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.03 18:28:11 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.